[2003 மே 5

391—

மாசுக் கட்டுப்பாடு

***20797—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி அருகிலுள்ள தனியார் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையால் அப்பகுதி மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், குறும்பூரில் இயங்கிவரும் ஈ.ஐ.டி. பாரி லிமிடெட் நிறுவனத்தின் சர்க்கரை ஆலை 22-7-2002 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டது. குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, 23-8-2002 அன்று தொழிற்சாலைக்கு முகாந்திர நோட்டீஸ் வாரியத்தால் அனுப்பப்பட்டது. குறைபாடுகளை நிவர்த்தி செய்யாததால், ஆலையை மூடுவதற்கும், மின் இணைப்பைத் துண்டிப்பதற்கும் 14-11-2002 அன்று வாரியம் ஆணை பிறப்பித்தது. 18-11-2002 அன்று மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. குறைபாடுகளை நிவர்த்தி செய்ய காலவரையறையுடன்கூடிய திட்டத்தைச் சர்க்கரை ஆலை தெரிவித்ததால் மூடுதல் உத்தரவை 25-11-2002 அன்று தற்காலிகமாக வாரியம் நிறுத்தி வைத்து, மின் இணைப்பு மீண்டும் வழங்கப்பட்டது. வாரியம் அறிவுறுத்தியபடி சர்க்கரை ஆலை, அதனுடைய குறைகளை நிவர்த்தி செய்ததால், இப்பொழுது சர்க்கரை ஆலை நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. எந்தவித சுற்றுச் சூழலும் அங்கே பாதிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 மே 5]

முற்பகல் 10-50

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் போட்டதற்குப் பின்னாலே, இந்த ஆலையின் நிர்வாகத்தினர் என்னை வந்து பார்த்தார்கள்; சந்தித்தார்கள். அந்த பாரி சர்க்கரை ஆலையின் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பதைத் தடுப்பதற்காக என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்பதை விளக்கிச் சொன்னார்கள். அதற்குப் பிறகு, சுற்றுச்சூழல் துறையினுடைய அதிகாரிகளும் என்னை வந்து பார்த்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும், ஒவ்வொரு தடவையும் கேள்வி போட்டு, சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க முடியாது. ஆகவே, மாதம் ஒரு முறை கட்டாயமாக சுற்றுச்சூழல் துறையினர்— ஏனென்றால், உயரமான புகைப்போக்கியின் மூலமாகப் புகையை வெளியே அனுப்புகிறார்கள். அது 10 அல்லது 15 கிலோ மீட்டர்கூட அந்தப் புகையிலே இருக்கிற துகள்கள் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாதம் ஒருமுறை கட்டாயமாக சுற்றுச் சூழல் துறையினர் அந்த ஆலையினுடைய—அந்த ஆலையினாலே மக்கள் பாதிக்கப்படாமல் இருக்கிறார்களா என்பதை அறிவதற்கு ஆய்வு செய்வார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்று மாசுபடுவதையும், நீர் மாசுபடுவதையும், மாசுக் கட்டுப்பாடு வாரியம் அடிக்கடி கண்காணித்துக்கொண்டிருக்கிறது. எந்தெந்த இடத்தில் தொழிற்சாலைகள் மாசு ஏற்படுத்துகின்றனவோ, தகவல் தெரிந்தவுடன் அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கிறோம். இப்போது இந்தியாவிலேயே சிறப்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்தான், அம்மா அரசினுடைய மாசுக் கட்டுப்பாடு வாரியம்தான் சிறப்பாகச் செயல்படுகிறது என்று எல்லோரும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்தை, அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 392, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.